# ஆத்மஜோதி



"திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட

திருநாவுக்கரசர்"

ஓம்



# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே—சுத்தானந்தர்.

| சோதி 6 | ஜயஹூ சித்திரைமீ 1-ந் திகதி | சுடர் 6 |
|---|---|---|

## பொருளடக்கம்.

| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | திருநாவுக்கரசர் தேவாரம் | 141 |
| 2 | கற்பகமே | 142 |
| 3 | நவீன உலகமும் நாவுக்கரசரும் | 143 |
| 4 | ஆதிசங்கரர் | 146 |
| 5 | அருணோதய........ | 148 |
| 6 | தலை ஏன் சிரித்தது | 149 |
| 7 | உன் அடிக்கே...... | 151 |
| 8 | சைவசமயிகள் | 153 |
| 9 | எதுவேவீடு? எது இன்பம்? | 156 |
| 10 | ஐந்து திருடர்கள் | 159 |
| 11 | கௌரி அம்மையார் | 161 |
| 12 | அனைத்துயிர்க்கும் அருள் | 164 |
| 13 | அன்பிலே காந்தீபம் | 167 |

## ஆத்ம ஜோதி

ஆயுள் சந்தா ரூ. 75. வருட சந்தா ரூ. 3.
தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்
60, டீல் பிளேஸ், கொள்ளுப்பிட்டி, கொழும்பு

பதிப்பாசிரியர்:— நா. முத்தையா
ஆத்ம ஜோதி நிலையம், நாவலப்பிட்டி [சிலோன்]

உ

# திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருநாவுக் கரையரெனுஞ் செம்மையாளர்
    தீயமணர் சிறைநீங்க வதிகை மேவுங்
குருநாமப் பரஞ்சுடரைப் பரவிச் சூலை
    கொடுங்*கூற்றா யினவென்ன வெடுத்துக்கோதி
லொருமானைத் தரிக்கு‡மொரு வரையுங்காறு
    மொருநாற்பத் தொன்பதி னாயிரமதாகப்
பெருநாமப் புகலூரிற் பதிகங் கூறிப்
    பிஞ்ஞகனா ரடியிணைகள் பெற்றுளாரே.

—உமாபதிசிவம்:

தேவரெலாந் தொழுந்தலைமைத் தேவர்பாதத்
    திருமலரை முடிக்கணிந்து திகழ்ந்துநின்ற
நாவரசே! நான்முகனும் விரும்புஞான
    நாயகனே! நல்லவர்க்கு நண்பனேயெம்
பாவமெலாம கற்றியருட் பான்மை நல்கும்
    பண்புடைய பெருமானே! பணிந்துநின்பான்
மேவவிருப் புறுமடியர்க் கன்புசெய்ய
    வேண்டினே னவ்வகைநீ விதித்திடாயே!

—இராமலிங்கர்

திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டி னெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மை திகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகி
லொருநாவுக் குரைசெய்ய வொண்ணாமை யுணராதேன்.

—சேக்கிழார்.

---

*'கூற்றாயினவாறு' என ஆரம்பிக்கும் முதற் பதிகத்தின் முதற்பாடல். (திருவதிகை).

†'ஒருவனையுமல்லா' எனத் தொடங்கும் திருத்தாண்டகம்; திருப்புகலூரில்பாடிய கடைசிப்பதிகத்தின்இறுதிப்பாட்டு

# கற்பகமே! யான் உன்னை விடுவேன் அல்லேன்!

நற்பதத்தார் நற்பதமே ஞானமூர்த்தி
நலஞ்சுடரே நால்வேதத் தப்பால் நின்ற,
சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய் இதுவுன் தன்மை;
நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னுள்
நிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற,
கற்பகமே! யானுன்னை விடுவே னல்லேன்
கனகமா மணிநிறத்தெங் கடவுளானே!

**பொழிப்புரை:-**

நல்ல பதவியை விரும்புபவர்கட்கு அந்தப் பதவியாக இருப்பவனே! ஞான சொரூபியே! சோதிவடிவே! நான்கு வேதங்களுக்கும் அப்பால் உள்ளதான, சொல் திறம் படைத்தோர் சொல்லும் நிலையையும் கடந்து நின்றதான, அதாவது எவராலும் குறித்துச் சொல்லமுடியாத, இடத்தில் இருப்பவனே! இது உன்இயல்பான தன்மை.

ஒரு நிலையில் நிற்பது போலக்காட்டி, சதா சஞ்சலமுள்ள, ஒரு நிலையில் நில்லாத மனத்தினுள்ளே, அழியுந்தன்மையுள்ள புலால் மயமான என்னுடம்பினிடத்தே புகுந்து நிலைத்துள்ள கற்பகமே! பொன்னும் மாணிக்கமும் போன்ற திருமேனியை யுடைய பெருமானே! என் நெஞ்சத்தில் குடி புகுந்த உன்னை இனி நான் எங்கும் போக விடமாட்டேன்.

**விளக்க வுரை:-**

தாண்டக வேந்தர் எம்மதத்தினர்க்கும் சம்மதமான இந்த அருமைப்பாடலில் தன்னையும் தலைவனையும் சீர் தூக்கிப் பார்த்து நமக்காகப்பேசுகின்றார். வெவ்வேறு தன்மையுள்ள பரம் பொருளும் சீவனும் ஒன்றுவது முடியுமா என்ற கேள்விக்குப் பதில் இப்பாடலில் அமைந்துள்ளது. அத்தோடு ஆண்டான்—அடிமைத்திறமும் நன்கு விளக்கப்பட்டுள்ளது. மனஉறுதியோடு அன்பு செய்து அறவழியிற் செல்வோமானால், அப்பாலுக்கப்பால் அமர்ந்துள்ளஇறைவன் நமது நெஞ்சை இடமாகக்கொள்வான் என்பது திண்ணம். அன்புஉள்ளம் படைத்த அடிமையை ஆண்டவன் தானகவே தேடி வருவான் என்பதும் வெளிப்படை. "தானே வந்தெம்மைத்தலையளித்தாட் கொண்டருளும்" எனவும் "யான் உன்னைச் சிக்கெனப்பிடித்தேன் எங்கெழுந்தருளுவதினியே" எனவும் வரும்மணிவாசகங்களுடன் ஒப்பிடுக.

# நவீன உலகும் நாவுக்கரசரும்.

(ஆசிரியர்)

மருள் நீக்கியார் தருமசேனர் என்னும் சிறப்புப் பெயர் பெற்றதும், பின்னர் 'நாவினுக்கருங்கலம் நமச்சிவாயவே' என்றஉண்மையை உணர்ந்து, படைக்கலமாக அந்த ஐந்தெழுத்தையே நாவிற் கொண்டு, சிவபெருமானிடம் அடைக்கலம் புகுந்து, 'அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்ச வருவது மில்லை' எனப்பாடி அதன்படியேவாழ்ந்து, ஐயாற்றில் கைலையைத் தரிசித்த அற்புத நிகழ்ச்சியில், "சத்தியும் சிவமுமாய தன்மை இவ்வுலகமெல்லாம்" என்ற உண்மையை தமது சொந்த அநுபவத்தில் கண்டதும், 'நாவுக்கரசு' என்னும் இறவாநாமம் பெற்றதும் சைவஉலகு நன்கறிந்த உண்மைகளாகும். அவற்றை ஈண்டு விபரித்தெழுதவேண்டிய அவசியமில்லை. எனினும், அவர் வரலாற்றின் சுருக்கத்தைப் பிறிதோரிடத்தில், அவருக்குத் தந்தையும் தாயும், தமக்கையும் குருவுமாய் விளங்கிய திலகவதியாரைப்பற்றி வித்துவான் ஆ. சிவலிங்கனர் எழுதியுள்ள கட்டுரையில் காணலாம். திரு. சிவலிங்கனர் கையாளும் எளிய இனிய நடை குழந்தைகளும் இலகுவில்விளங்கக்கூடிய ஒன்ருகும். பெரிய புராணப் பெண்மணிகளைப்பற்றி அவர் எழுதியுள்ள கட்டுரைகள் புந்தம் புதிய கருத்துக்களை அடக்கியுள்ளன. சைவச் சிறுமியர்கள் சகலரும் படித்து நற்பயன் அடைய வேண்டுமென்பது எமதுபேரவா. திருஞானசம்பந்தர் மலராக வெளிவரப் போகும் அடுத்த மாச 'ஜோதி'யில் மங்கையர்க் கரசியாரின் வரலாறு இடம் பெறும்.

"கடவுளும் வேண்டாம், கோயிலும் வேண்டாம், வழிபாடோ பிரார்த்தனையோ ஒன்றுமே வேண்டாம்; மனச்சாட்சி இருக்கின்றது அதுபோதும் நமக்கு வழிகாட்ட; மனித சமுதாயத்திற்குச் சேவை செய்து உலகைச் சீர்படுத்துவதே நமது கடமை," என்று இன்று பிரசாரம் செய்கிறது நவீன பகுத்தறிவுலகு. புதுமை ஆராய்ச்சி என்னும் பேரால் நமது பழைய பண்பாடுகள் அனைத்தையும் புறக்கணித்து, புரட்சிப் பேச்சால் கிளர்ச்சி செய்து நாட்டின் அமைதியைக் குலைப்பதில் மகிழ்ச்சியடையும் 'அறிஞர்களின்' பித்தலாட்டம் உண்மையான பகுத்தறிவு ஆகமாட்டாது, புண்ணியம் பாவம், நித்தியம் அநித்தியம், சத்தியம் அசத்தியம், நன்மை தீமை ஆகியவற்

றைப் பிரித்துணரும் விவேகத்தைத்தருவதே உண்மையான பகுத்தறிவாகும். விலங்கினத்திலிருந்து நம்மை வேருகப்பிரித்துக் காட்டுவது அதுவே. இன்றைய பகுத்தறிவுத் தோழர்களைப் பற்றிய தீர்க்கதரிசனம் பெற்றுப் போலும் அருணகிரிநாதர். "அருள் பெரு அநாசார கருமயோகி ஆகாமல்......ஆசாரபரமயோகி ஆமாறு" எனப் பாடியுள்ளார்! (திருப்புகழ்1047). இருபதாம் நூற்ருண்டில் அருணகிரிக்கு அளப்பரும் பெருமையைத் தேடிக்கொடுத்த ரமணமூர்த்தியும் அதேகருத்தை உள்ளடக்கி, "உலகைத்திருத்து முன் உன்னைத் திருத்து: ஒவ்வொருவரும் திருந்திஞல் உலகம் தானே திருந்தும்" என்று உபதேசித்தருளினுர்

நவீன பகுத்தறிவுலகு பெறக்கூடிய. பெறவேண்டிய பலபோதனைகள் நாவுக்கரசரின்வாழ்க்கையிலும் வாக்கிலும் நன்கமைந்துள்ளன. அவர் சைவசமய சாஸ்திரங்களைக் கற்றிருந்தும், அவைபோதிக்கும் அருள் நெறியை முதலில் பேணவில்லை. இறைவன் திருவருளைப் பெறவேண்டு மென்ற ஆர்வத்துடன் தவஞ் செய்யாது, பிறசமயஞ்சார்ந்து பட்டமும் பதவியும் பெற்றனர். இவ்வாறு அவர் வெறும் புத்தக அறிவிலே மயங்கியதற்குக் காரணம் முற்பிறப்பின் தவக்குறைவாகும். ஆஞல் அவரின் பூர்வபுண்ணியம் முற்றிலும் வீண் போகவில்லை. தமக்கையாராந் திலகவதியாரின் உள்ளங்கனிந்த பிரார்த்தனைக் கிரங்கிய எம்பரமபதி அவரைப்பக்குவம் பார்த்து ஆட்கொண்டனர். "பண்டு புரி நற்றவத்துப் பழுதினளவிற வழுவுந், தொண்டரை யாளத் தொடங்குஞ் சூலை வேதனை தன்னைக் கண்டருநெற்றியாரருள" என்ற சேக்கிழார் பாடலை நோக்குக.

சென்னியில் வைத்த சிவனருளாலே நாவுக்கரசர் தன்னையறிந்து தத்துவ ஞானியாகி. முன்னைவினையின் முடிச்சை அவிழ்த்து பின்னை வினையைப் பிடித்துப்பிசைந் துபூரணநிலையை யடைந்தனர். இந்த முறையில் பசுத்துவம் நீங்கிச் சிவமாந்தன்மையடைந்த போதிலும், அவர் தாம் உலகுக்கு உபதேசிக்க வந்த சரியை மார்க்கத்திலேயே இறுதி வரையில் வாழ்ந்தார். அவர் செய்த தொண்டுகளெல்லாம் மக்களுக்கு உதாரணமாகச் செய்யப்பட்டவையாகும். தம்செயலாக அவர் எதையும் கருதவில்லை; சிவன் செயலாகவே செய்தார். அதனலன்ருே ஆயிரத்து முன்னூறு வருஷங்கள் கழிந்தபின்னரும், 'என்

கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அவரது வாக்கு தமிழ்நாட்டில் ஒளி வீசிக்கொண்டிருக்கிறது.

நாவுக்கரசரின் வாழ்க்கை நமக்கு விளக்கும் பிறிதோர் முக்கிய படிப்பினை அடியார் வணக்கம். திருத்தொண்டத்தொகையோ பெரியபுராணமோ தோன்றுவதற்கு முன்னரேயே அடியார் பெருமை தமிழ்நாட்டில் பேசப்பட்டு வந்ததாகும். "தொண்டர் தம்பெருமை சொல்லவும் பெரிதே" என்பது ஔவைப்பிராட்டியின் திருவாய்மொழி. "பத்தர் தம் பத்தியின் பாற்படிலல்லது, முத்தினையார் சொல்ல முந்துகின்றாரே" என்றனர் திருமூலர் ஆனால், அடியார் வணக்கத்தை மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் மிகவும் அருமையான முறையில் தமிழ் நாட்டில் ஆரம்பித்து வைத்த பெருமை நாவுக்கரசரைச் சார்ந்ததாகும். அதுஎப்படி என்பதைச் சிறிது ஆராய்வாம்.

நாவுக்கரசர் திருப்பூந்துருத்தியில் திருமடம் அமைத்து இறைவழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, ஞான சம்பந்தர் பாண்டி நாட்டில் சமண் ஒழித்து சைவநெறியைத் தழைக்கச் செய்துவிட்டு சோழநாட்டுக்குத் திரும்பினார். தாண்டகவேந்தரைக் காண வேண்டுமென்ற ஆர்வத்துடன் அவர் திருப்பூந்துருத்திக்கு நேரே போயினர். அதனையறிந்த நாவரசர் ஆளுடைய பிள்ளையாரை வணங்கும் ஆவலுடன் அடியார் கூட்ட நெருக்கத்திடையே மறைந்து சென்று பிள்ளையார் ஏறிவந்த முத்துச்சிவிகையை எவரும் தெரியாதபடி சுமந்து சென்றனர். திருப்பூந்துருத்தியை யடைந்ததும். சம்பந்தர் 'எங்குற்றார் அப்பர்?' என வினவினார். மேல் நடந்ததை சேக்கிழார் வாக்கில்படித்து உளம் உருகி இன்புறுவோம்:-

*"உருகா நின்றும் மடியேன் உம்மடிகள் தாங்கிவரும்*
*பெருவாழ்வு வந்தெய்தப் பெற்றிங் குற்றேனென்றார்."*

⁂ ⁂ ⁂ ⁂ ⁂

*"பிள்ளையார் அதுகேளாப் பெருகுவிரைவுடன் இழிந்தே*
*உள்ளமிகு பதைப்பெய்தி உடையஅரசினை வணங்க*
*வள்ளலார் வாகீசர் அவர் வணங்கா முன்வணங்க*
*துள்ளுமான் மறிக்கரத்தார் தொண்டரெலாந் தொழுதார்த்தார்.'*,

அடியார் உறவினரின் அற்புதத் தன்மையும் அடக்கமும் பணிவும் இருந்தவாறென்னே!

*முற்தொடர்ச்சி:-*

# ஆதி சங்கரர்.

*[கே. எஸ். நாகராஜன்]*

எத்துறையிலாவது இருவரிடையே வேறுபாடு உண்டானால், அதைத் தீர்ப்பது எவ்வாறு என்பதற்கு சங்கரரது வாழ்வு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். சங்கரருக்குயாருடன் என்ன வேறுபாடு எழுந்தாலும், உடனே அவருடன் நியாயமாக, சான்றோர்க்கேற்ற முறையில் வாது செய்யத்தொடங்குவார். மண்டன மிஸ்ரா[illegible]ற ஒருபெரியார், கர்மமே சிறந்தது; ஞானத்தால் இன்பம் எய்துதல் இன்று என்ற கருத்துடையவர். அவருடன் வாது செய்து, ஞான மார்க்கத்தின் பெருமையை நிலைநாட்ட வேண்டியிருந்தது. சங்கரர் மண்டனரை வாதுக்கழைத்தார். வாதென்றால் தீர்ப்பளிக்க ஒருவர் வேண்டு மன்றோ? கர்மவாதியாகிய மண்டனருடைய மனைவியார் **உபயபாரதி** என்பார் அறிவு நிரம்பப்பெற்றவர்.

---

*முற்பக்கத்தொடர்ச்சி:-*

நம்பியாண்டார் நம்பிகளால் திருநாவுக்கரசு சுவாமிகள் பேரில் பாடப்பெற்ற திருவேகாதசமாலையின் எட்டாம் பாடலில் அவரின் திருவடிப் பெருமை வேறெந்த நூலினுங்காணாத முறையில் தரப்பட்டுள்ளது. "சார்தரு மடியவர் இடர்தடிவன, தாயினு நல கருணையையுடையன, தூயன தவமுனிவர்கள் தொழுவன" என்பவை அதிலடங்கிய சிலவரிகள். இவ்வித மகிமை பொருந்திய திருவடிகளைச் சூடும் மனிதர்கள்,

> *"நிதியராகுவர்; சீர்மையுடையவர் ஆகுவர்; வாய்மை*
> *நெறியராகுவர்; பாவம் வெறியர் ஆகுவர்; சால*
> *மதியராகுவர்; ஈசன் அடியராகுவர்; வானம் உடையராகுவர்"*

எனச் சத்தியங்கூறி, "பிறவியறுக்க அவர் (அப்பர்) திருவடி சூடுவதே சிறப்பான பணி" என முடிக்கின்றார் நம்பி. நம்பியின் பாடலில் நம்பிக்கை வைத்து அப்பர் சுவாமிகளின் திருப்பாதங்களைத் தினமும் தியானித்து நற்கதியடைவோமாக!

> *"திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட*
> *திருநாவுக் கரையன்றன் அடியார்க்கு மடியேன்"*

**(28-4-54) சித்திரை 16ஆம் திகதி-அப்பர்திருநாள்)**

ஒழுக்கத்திற்சிறந்தவர். நீதி வழுவா நன்னெறியாளர். ஆகவே அவரையே நடுநிலையேற்று முடிவு கூறுமாறு சங்கரர் வேண்டிக்கொண்கொண்டார். அவ்வாறே அவ்வம்மையாரும் நடுநிலையில் நின்று தீர்ப்பு அளித்தார். சங்கரர் வெற்றியடைந்தார். மண்டனரும் அத்தீர்ப்பை ஏற்றுக்கொண்டார். இதனால் எண்ணத்தில் வேற்றுமையுண்டாகுங்கால், மாறுபட்ட எண்ணமுடையோர் கூடி, சான்றோர் முன்னிலையில் முறையாக வாதித்து முடிவுகாணுதல் நன்று என்பதும், சான்றோர் எவராயினும் அவரைநடுநிலையாளராகஏற்றுக்கொள்வதே தகுதி என்பதும், அவருடைய முடிவை ஏற்று நடத்துவதே சிறப்பு என்பதும் விளக்கமுறுகின்றன. இம்முறையைப் பின்பற்றுவோமானால் தற்போது நம்மிடைக்காணும்பலபிரச்சனைகள் எளிதில் அற்றுப்போம்.

சங்கரர் பெரிய ஞானி; ஞானமார்க்கத்தைப் போற்றிப்பரப்பினார். எனினும், கர்மத்தையும் பக்தியையும் போற்றாமற்போகவில்லை. கர்மவாதிகளான மண்டனமிஸ்ரருக்கும், பாரதிக்கும், சங்கரர் மட்டற்ற மரியாதை செய்து, அவர்களைத் தம் சீடர்களாக்கிக்கொண்டார். பாரதிக்கு ஓர் ஆலயம் நிறுவி, பூஜை செய்து வந்தார். மேலும் ஸனந்தனர், தோடகர் என்ற பக்திச் செல்வர்களுக்கு அருள் புரிந்து தம் சீடர்களாக ஏற்றுக்கொண்டார். தம் அன்னையார் மறைந்ததும், அவரிருந்த இடத்திற்குச்சென்று, அவருக்கான ஈமச் சடங்குகளை முறைப்படி செய்தார். இவற்றால் அவர் ஞானம், பக்தி கர்மம் ஆகிய மூன்றிலுள்ள உண்மைகளையும் அறிந்து போற்றினார் என்பது புலனாகிறது. அவ்வவர் நிலைக்கேற்ற ஒரு நெறியைப்பின்பற்றவேண்டும் என்பதே முக்கியமான கொள்கை.

இறுதியாக, சங்கரருடைய சமரச நோக்கைச் சிறிது காண்போம். வேதவிதிக்குமுரணான கொள்கைகளையும், வாழ்க்கை முறைகளையும் தகர்த்தெறிந்து, சங்கரர் சாஸ்திரரீதியான ஆறு மதங்களை நிறுவினார். அவற்றுள் வைணவமும் ஒன்றாகும்- அவர் விஷ்ணுவிடத்தும் அவருடைய பற்பல அவதார உருவங்களிடத்தும் மாறாக்காதல்கொண்டவர். **பஜகோவிந்தம், ஹரிமீடே, விஷ்ணு சகஸ்ரநாமபாஷ்யம்** போன்ற அவரதுநூல்களைப்பயின்றால் இவ்வுண்மைபுலப்படும். தம்தாயார் இறக்கும் தறுவாயில்இருந்தபோது சங்கரர் தம் அன்னை

# அருணோதய மணியே!

எடுப்பு.

அருணோ தயமணி யே! - அம்பலத்தாடும்.
ஆனந்தப் பரங்கனியே! (அரு)

தொடுப்பு.

இருவினை யொழித்தென்றன் கருக்கணக் கழித்திட
திருக்கடைக் கணித்தருள்! இருட்குலங் கிழித்தெழும் (அரு)

முடிப்பு.

காமக்ரோ தவகந்தைக் காடெல்லாம் அலைந்தே
கண்ணற்ற கபோதியாய்க் கடுங்குழி விழுந்தேன்
நாமதா ரகமுடன் ஞானக்கண் திறந்தே
நம்பிய ஏழைக்குன் அன்பையே சுரந்தான்! (அரு)

"பரமஹம்ஸதாஸன்"

---

முற்பக்கத்தொடர்ச்சி:-

யார்க்கு வீடுபேற்றை அளிக்குமாறு விஷ்ணு பக்தர்களை வேண்டினார் என்பது வரலாறு.

கோகர்ணம் என்னும் இடத்தில் தங்கி இருந்தபோது அவர்,

"ஹரியும் ஹரனும் ஒன்றே"

என்ற தத்துவத்தை விளக்கும் வகையில் சில அழகான பாடல்களை இயற்றியருளினர்.

"எப்பெயர் இட்டு எவ்வுருவில் ஏத்தினும் ஆர் பேர் உருஇல்
அப்பொருளைக் காண் வழி அது."

என்னும் பொன் மொழிக்குச் சங்கரருடைய வாழ்வு ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்ற தன்றோ?

# தலை ஏன் சிரித்தது.

[முத்து]

பாண்டவர்களின் புதுமனைப் பிரவேசத்திற்கு வந்த துரியோதனனைப்பார்த்து, மேல்மாடியில் தருமருடன் நின்ற திரௌபதி சிரித்தாள். அவளுடைய சிரிப்பின் விளைவால் துகிலுரிதல் முதலாகப்பாரதயுத்த[illegible] ஈறுக நடைபெற்றது. இது பாரதக்கதை.

முப்புரத்தசுரர்களையும் அழித்து மக்களைக்காக்க விரும்பினார் பரமசிவன். பூமியைத் தேராகவும் சூரியசந்திரர்களைச் சில்லுகளாகவும் மகாமேருமலையை வில்லாகவும் ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தியை அம்பாகவும் கொண்டு புறப்பட்டார். என்னை இல்லாமல் இந்தப்பரமசிவன் ஒருகாரியமும் செய்யமுடியவில்லையே என்று எண்ணினார். மகாவிஷ்ணுமூர்த்தி. இவ்வெண்ணத்தை அறிந்தார் இறைவர். அவருக்கு உடனே ஒரு புன்சிரிப்பு தோன்றியது. அச்சிரிப்பிலே அழிந்தன முப்புரங்களும். இது புராணக்கதை.

சிவனார் கையிலே தலை ஒன்று இருக்கிறது. அது எப்போதும் சிரித்தபடியே இருக்கிறது. அதனால் அதனை 'நகுதலை' என்பார்கள். அது ஏன் சிரிக்கிறதென்று அப்பர் சுவாமிகள் கற்பனை செய்கிறார்கள். 'நாவுக்கரசர்' என்று சிவபிரானால் புகழப்பட்டவரல்லவா? அப்பர். தம்பெயருக்கேற்ப நாவன்மையுமுடையவர். அவர் தம்புலமை முழுவதையும் இறைவனுக்கே அர்ப்பணம் செய்தவர். அவருடைய கருத்தும் கனவும், கற்பனையும் விற்பனமும் இறைவனைப் பற்றியே அமைந்திருக்கும்.

சிவனார் ஒரு பெரிய குடும்பி. அவருடைய குடும்பம் மிகமிகப் பெரிது. உலகத்தில் பகைசாதிக்கும் பொருட்களெல்லாம் அவரிடம் மிகஒற்றுமையாய் இருக்கின்றன. உலகில் நாம்எவற்றை வேண்டாதன என்று தள்ளிவைத்தோமோ அவற்றையெல்லாம் ஆபரணமாகஅணிந்துள்ளார். பிறர் கண்டால்அஞ்சும் என்பையும் பாம்பையும் அணிந்திருக்கிறார். அவர் திருக்கையில் இருப்பதோ கபாலம்; பெண்கள் எளிதில் ஒன்றைக் கண்டு அஞ்சுவது இயல்பு, பாம்பென்றால் படையும் நடுங்குமானால். பெண் அஞ்சுவதைச் சொல்லவா வேண்டும்?

ஒருநாள் இறைவர் திருமுடியில் இருந்த பாம்பு மெல்லத்தலை நீட்டியது. அது சும்மா கிடந்தால் பயம் வராது. மெல்ல அசைந்தது; படம் எடுத்து ஆடியது. இறைவரின் சடையிலிருந்த கங்கை பார்த்தாள்; அஞ்சினாள்; கலக்கமடைந்தாள்; சற்றே நகர்ந்தாள்.

கங்கையின் தோற்றத்தைப் பாம்பு பார்த்தது; கங்கைபயந்தாள் என்பதைப் பாம்பு அறியவில்லை. அவளது தோற்றம் மயிலின்சாயலை நினைவூட்டியது. பாம்புக்குப் பகை மயில் அல்லவா? கங்கை பயந்து நகர்ந்தபோது அது அஞ்சியது. பாம்பு பயந்து நடுங்கித் துள்ளவே அதனைக்கண்டது, இறைவர்திருமுடியிலே உள்ள பிறை. சந்திரனுக்கும் பாம்புக்கும் பகை. "பாம்பு இப்படித் துள்ளுகிறதே; நம்மைத்தீண்டுமோ" என்று ஏங்கியது பிறை. இந்த மூன்று நிகழ்ச்சிகளையும் பார்த்தால் யாருக்குத்தான் சிரிப்பு வராது. இறைவர் கையில் இருக்கும் கபாலம் பல்லைக் காட்டிக் கொண்டிருக்கிறது. இயற்கையாகவே அது அப்படியிருந்தாலும், மேலே சொன்னகாட்சியைக் கண்டு சிரிப்பது போல் இருந்தது.

இறைவர் திருமேனியிலே சேர்ந்த பிறகு பகைமைஇன்றி வாழும் வாழ்வு பாம்புக்கும் சந்திரனுக்கும் கிடைத்திருக்கிறது. அதை மறந்து பழைய வாசனையின் விளைவாக அவை அஞ்சுகின்றன. அவற்றின் அறியாமையைக்கண்டு சிரிப்பது போல் இறைவன் கையில் நகுதலை விளங்குகிறது.

எங்களையும் பார்த்துச் சிரிக்கிறது கபாலம். "ஆணவத்தினால் அல்லவா எனக்கு இக்கதி நேர்ந்தது என்னை எத்தனை முறை பார்த்துள்ளீர்கள்? பார்த்தும் உங்களுக்கு இன்னம் புத்திவரவில்லையே! என்னைப் பார்த்தும் நீங்கள் உங்கள் ஆணவத்தைக் கைவிட்டு இறைவனைச் சரணடையாவிட்டால் நீங்கள் கற்றகல்வியின் பயன் தான் என்ன?" என்று சொல்லிச் சிரிப்பது போலவும் இருக்கிறது. அப்பர் சுவாமிகளின் நகைச் சுவையை அநுபவித்து சிரிப்போம் இப்போ படியுங்கள் தேவாரத்தை.

*"கிடந்த பாம்பு அருகு கண்டு அரிவை பேதுறக்*
*கிடந்த பாம்பு அவளை ஓர் மயில் என்று ஐயுறக்*
*கிடந்த நீர்ச் சடைமிசைப் பிறையும் ஏங்கவே*
*கிடந்து தான் நகுதலைக் கெடில வாணரே."*

# "உன் அடிக்கே போதுகின்றேன்"

(அப்பர் அடியான்)

மனிதன் சில்வாழ் நாட்பல்பிணிச் சிற்றறிவுடையவன். அவன் வாழ்நாளில் நித்திரை, உணவு, நோய், இளமை, மூப்பு இவற்றை யெல்லாம் கழித்து மீதி நாட்களைக் கணக்கிட்டால் எஞ்சியிருப்பது மிகமிகச் சொற்பமே. இந்த மிகக் குறைந்த நாளில் அவன் எண்ணு வனவோ என்றால் எண்ணிலடங்கா. நித்திரையிலும் வேண்டாத கனவுகளை யெல்லாங்கண்டு உடலையும் மனத்தையும் கெடுத்துக் கொள்ளுகின்றான்.

ஒன்றை நினைத்தால் அது ஒழிந்து இன்னொன்று வந்தாலும் வரலாம். அன்றி அதுவே வந்தாலும் வரலாம் நினையாத ஒன்று திடீரென முன்தோன்றலாம். இவையெல்லாம் ஈசன் செயல் என ஔவையார் சொல்லுகின்றார்.

மனம் என்றால் என்ன? எண்ணங்களின் கூட்டமே மனமாகும். இந்த மனத்தை ஆண்டவன் ஏன்படைத்தான் என்றொரு கேள்வி?

*"நெஞ்சே நீ நினையாய்-நிமிர் புன்சடை நின்மலனை*
*மஞ்சாடும் மலை மங்கை மணாளனை நெஞ்சே நீநினையாய்"*

என்று நாவுக்கரசர் பதில் கூறுகின்றார். எதைநினைக்க வேண்டுமோ அதை நினையாமையினால் நாவுக்கரசரைச் சூலைநோய் வருத்தியது. பஞ்சாட்சர உபதேசத்தோடு நீறிட்ட உடனே சூலை நோய் தணிந்தது. அப்போ இறைவனைப் பார்த்து வேண்டுதல் செய்கிறார்,

*"நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்*
*நினையாதொருபோதும் மறந்தறியேன்."*

உன்னைத் தவிர வேறுவிஷயங்களுக்கு இடங் கொடுத்ததனால் பட்ட பாடுபோதும். நினைத்தால் உன்னையேயன்றி வேறு நினைப்பதில்லை. சிவபிரானது திருவருளைப் பெற்றதும் நாயனார்க்குத் தாம்கயிலாயத்தில் வாகீசராகத் தொண்டு செய்தது நினைவு வர நினை யாதொருபோதும் மறந்தறியேன் என்கிறார்.

*"பேச்சுப் பேச் சென்னும் பெரும் பூனை வந்தக்கால்*
*கீச்சுக் கீச்சென்னுமாம் கிளி"*

இது ஒரு சாதாரண பழமொழி. கிளி எத்தனையோ பேசிக்கொண்டிருக்கும் பூனையைக் கண்டதும் கீ! கீ!! என்று கத்தும். இதேபோல் மனிதனும் எத்தனையோ வீரப்பிரதாபங்களையெல்லாம் கூறுவான்; சுகமாய் இருக்கும் போது ஆண்டவன் நாமத்தைக்கூறுவான்; நாமப்பெருமை கூறுவான்; அவன் புகழ்கூறுவான்; உடலுக்கு ஒருஊறு வரும் நேரத்திலே இவையெல்லாம் ஓடி ஒழிந்து விடும். சுந்தரர்

**"வழுக்கி வீழினும் திருப்பெயர் அல்லால் மற்று நான் அறியேன் மறுமாற்றம்"**

என்கிறார். நாவுக்கரசர்

**"நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே"**

என்கிறார். இந்த நிலை அடைவதற்கு எண்ணெய் ஒழுக்குப்போன்று ஆண்டவனுடைய இடைவிடாத சிந்தனை வேண்டும். நாப்பழகி மனம் லயித்து உடம்பு முழுவதும் அவன் நாமத்தால் ஊறிய பண்பு வேண்டும்.

எதற்கும் அஞ்சாத மனிதன் பாம்பைக்கண்டவுடனே அஞ்சுவான் என்பது உலக வழக்கு. "பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்" பாம்புக்கும் அஞ்சாத ஒருவன் இருந்தால் மரணத்திற்குப்பயப்படுவானும். அதற்கும் பயமில்லாது வாழலாம் என மகான்கள் வழிகாட்டிப்போயினர். ஆண்டவனிடத்திலே எல்லாம் ஒப்படைக்கப் படும் போது தன்னைப்பற்றிய எண்ணமோ அன்றி மரணத்தைப் பற்றிய எண்ணமோ இல்லாதொழிகின்றது. ஆண்டவனைப்பற்றிய நினைவிலே இவையெல்லாம் அடிபட்டுப் போகின்றன இப்படியிருந்தும் மரணகாலத்தில் ஒன்பது வாசல்களும் அடைக்கப் படும்போது ஆண்டவனுடைய எண்ணமும் இல்லாது போய்விடுகின்றதாம். ஆனபடியினுல்மரணம் வருமுன்பே ஒவ்வொருவரும் தம்மை ஆண்டவனடியிலே ஒப்புவித்து விடவேண்டுமாம்.

"பிழைப்பனுகிலும் திருவடி பிழையேன்" என்கிறார் சுந்தரர் நாவுக்கரசர் ஒரு சித்திரைத் திங்கள் சதய நாளிலே தம் திருமெய் ஒடுங்குமென அறிந்து

**"எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனே**
**எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்**
**கண் இலேன் மற்றோர் களைகண் இல்லேன்**

# சைவ சமயிகள் சிறுதெய்வ வழிபாடு செய்யலாமா?

(சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக்குருக்கள்)

சைவசமயிகளாவார் முழுமுதற்கடவுளாகிய சிவபிரானுரையும் மலரின் மணம்போல அச்சிவபிரானுேடிணை பிரியாத தேவியையும் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனத்தின் பொருட்டுக் கணபதி, முருக கடவுள், வைரவர், வீரபத்திரர், ஆதிய உருவங்கொண்ட சிவகுமாரர் களையுமே யன்றிப் பிறதெய்வங்களை வழிபாடு செய்யாத நியதியுடையோர் ஆவர். சூரன், கறுப்பன், சாமுண்டி, மாடன் என்னும் இன்னேரன்ன பெயருள்ள தேவதைகளுண்டென்னுங்கொள்கையோடு அவற்றிற்கு ஊனும்மதுவும் உவந்து படைத்து வெறியாட்டயர்தல் உண்மைச்சைவசமயிக்கு ஆகாது. மாரி, காளி, சாமுண்டி என்பன சிவசக்தியின் பேதவடிவமெனச் சிலர் கொள்கையாயிருத்தலின் அவைகளை வழிபடும்போது ஊனும் மதுவுமின்றிச்சாத்துவிக உணவுபடைத்து இவற்றின் மூலம் மகாதேவியே அருள் செய்பவள் என நம்பி வழிபட வேண்டும்.

ஆதிசங்கராசார்ய சுவாமிகள் தாம்செய்த சிவானந்தலஹரியில் சிறு தெய்வ வழிபாடு செய்யேன்; எனத்துதிக்கும் சுலோகம் வருமாறு:—

*ஸஹஸ்ரம் வர்த்தந்தே ஜகதி விபுதா: க்ஷுத்ரபலதா:*
*நமந்யே ஸ்வப்நே வா ததநுசரணம் தத்கிருதபலம்*
*ஹரிப் பிரம்மாதீநா மபி நிகடபாஜா மசுலபம்*
*சிவம் யாசே சம்போ! சிவ தவபதாம்போஜ பஜநம்.*

---

*முற்பக்கத்தொடர்ச்சி:-*

*கழலடியே கைதொழுது காணின் அல்லால்*
*ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்*
*ஒக்க அடைக்கும் போது உணரமாட்டேன்*
**புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்**
*பூம்புகலூர் மேவிய புண்ணியனே.'*

என்ற பிரார்த்தனைபோடு பாடி, சிவானந்த ஞானவடிவாகித் திருவடியில் அமர்ந்தருளினர்.

தமிழுரை:— **ஜகதி**—உலகத்திலே, **க்ஷுத்ரபலதா:**—அற்பபயன்களைக் கொடுக்கிற, **ஸஹஸ்ரம் விபுதா:**—ஆயிரம் (கணக்கான) தேவர்கள். **வர்த்தந்தே**—இருக்கிறார்கள்.

**அஹம்**—நான், **ஸ்வப்நேவா**—கனவிலாயினும், **தத்அநுசரணம்**—அவர்களை அநுசரித்தலையும், **தத்க்ருதபலம்**—அவர்கள் செய்யும் பயனையும். **நமந்யே**—நினைக்கமாட்டேன். **நிகடபாஜாம்**—சமீபத்திலிருக்கிறவர்களான, **ஹரிப்ரஹ்மாதீநாமபி**—விஷ்ணு பிரமா முதலிய தேவர்கட்குக் கூட; **அசுலபம்**—எளிதிற் கிடையாததான, **தவபாதாம்போஜ ப்ரு...**—உமது பாததாமரைகளைத் துதிக்கும் பேற்றை. **சிரம் யாசே**—என்றும் கிடைக்க வேண்டுகிறேன்.

இத்தோத்திர சுலோகத்திலே ஸ்ரீ சங்கர பகவத் பாதர் அநித்திய மான சிறுசிறு உலகப் பயன்களுக்காகச் சிறுதெய்வ வழிபாடு செய்யேன்; முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானே! உமது திருவடித் தாமரைகளையே துதிக்கும் பேறு தருக! எனவேண்டுகிறார். பிறப் பிறப்புடையதெய்வ நிலையடைந்த தேவதைகள் வழிபடுவோர்க்குச் சில உதவிகளைச் செய்யினும் இறுதியில் நோய், துன்பம், தரித்திரம் சந்ததிக்கேடு, குடும்ப அழிவைச் செய்து விடுகின்றன. இதனாலன்றோ வாகீச அடிகளும்,

***"என்று நாமியாவர்க்கு மிடைவோமல்லோம் இருநிலத்தி லெமக்கெதிராவாருமில்லைச், சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோமல்லோம் சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம், ஒன்றினாற் குறையுடையோமல்லோ மன்றே உறுபிணியார் செயலொழிந்திட் டோடிப்போனார், பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப்புண்ணியனை நண்ணியபுண்ணியத்துளோமே.***

"தலை மாலை தலைக்கணிந்த தலைவனை யடைந்த புண்ணியப்பேறுடைய யாம் அவர்திருவடியே புகலிடமாகப் பெற்றுக் கொண்டோம்; ஆகையினாலே நோயில்லை; எதிரியில்லை; ஒரு குறையுமில்லை; தீமை செய்யுந் தேவதைகளாயினுமாகுக! நோய்தரும் பேய்களாயினுமாகுக! யாரையும் நாம் வணங்கோம்; ஒருக்காலும் சிறுதெய்வ வழிபாடு செய்யோம்; என்று வீரம் பேசுகின்றார்.

தேவீ பக்தரான அபிராமிப்பட்டரோ; "***உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில் வந்து இங்கு எமையுந் தமக்கன்பு செய்ய வை***

த்தார்'' ஆதலின், "வினை பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்க வன்பு பூணேன்'' என்று திடமாகக் கூறுகிறார்.

சிறுசிறு சிவதருமங்கள் செய்து அப்புண்ணியப் பயனாற் சில காலந் தேவ வடிவமும் சிற்சில சக்திகளும் பெற்ற சீவான்மாக்களே சிறு தெய்வ நிலை எய்தின. சிவபாவத்தாற் பேய் வடிவமெய்தின. இவை உலகமெங்கும் அருவமாகத்திரிகின்றன. முழுமுதற் கடவுளை அணுக இயலாத தகுதியற்ற மனிதர் சிலர் தத்தம் மனநிலைக்கேற்றபடி தமது இலௌகிகப் பயன்களுக்காக இத்தேவதைகளை வழிபட்டு இவற்றின் மூலம் அறியாமை மிகுந்துள்ள உலகமக்கள் மயங்கத்தக்க சில சித்திகளைப் பெறுகின்றார்கள். இங்ஙனம் அடையப்பெறுஞ் சித்திகள் மருட்சித்திகள் ஆகும். சில மந்திரவாதிகள் கணபதி, சுப்பிரமணியர், வைரவர், வீரபத்திரர், காளி என்று பெயர் சொல்லி உபாசனை செய்து சிலகாரியங்களைச்செய்து முடிக்கிறார்கள். அவர்கள் மேற் கூறிய உண்மைத் தெய்வ வழிபாட்டுக் குத்தகுதியற்ற மனோநிலை ஆசார ஒழுக்க மற்றவராயிருப்பின் அவர்கள் நிலைமைக் கேற்ற ஒரு ஜீவாத்மா. (சிறுதெய்வ நிலையடைந்த உயிர்) அவர்கள் வழிபடும் இடத்தில் நின்று அவர்கள் வழிபடும் தெய்வமாக அவர்கள் மூலம் சில மருட் சித்துகளைச் செய்கின்றன. இவ்வுபாசகர்களும் அவைகளை மேற்கூறிய உண்மைத் தெய்வங்களாக நினைத்தும் அத்தெய்வங்களே தமக்கு வேலையாட்களாக நின்று தாமேவும் சிறுவேலைகளைச் செய்கின்றன எனவும் நம்பி ஏமாந்து அகங்காரங்கொள்ளுகிறார்கள்.

உண்மைக்கடவுள் அருட்சித்தி அருளுதல் "தம்மை யுணர்ந்து தமையுடைய தன்'' உணர்ந்து "தானவனாகுஞ் சமாதி கைகூட"ப் பெற்று"என் செயலெல்லாமுன் விதியே நீயேஉண்ணின்றுஞ்செய்வித்தும் செய்கின்றாயென்றும்" நினைந்து உடல் பொருள் ஆவிமூன்றையும் அரன்பணிக்கேயாக்கி அவன் கைக் கருவியாக உலவும் மெய்யடியார்க்கேநிகழ்வதாகும். ஆகையினாலே அருட்சித்தி, மருட்சித்தி; அருள்ஞானம், மருள்ஞானம்; பதித்தெய்வம், பசுத்தெய்வம்; என்பவற்றின் வேறுபாடுணர்ந்து முழுமுதற்கடவுள் வழிபாட்டின் பெருமையறிந்து வழிபட்டுப் பயன் பெறுதல் ஒவ்வொரு சைவசமயியின் கடமையும் ஆகும்.

# எதுவே வீடு? எது இன்பம்?

*[ராஜாஜீ]*

மோக்ஷம் அடைவது என்றால் ஓர் ஊரில் இருந்து வண்டி ஏறி அல்லது நடந்துபோய் இன்னொரு ஊரை அடைவது போலல்ல. அந்தராத்மாவும் தானும் ஒன்றே என்கிற ஞானம் உண்டாகி வெயிலும் நிழலும் ஒன்றுதல் போல்உண்மையை அடைதலே மோக்ஷம். வேற்றுமை உணர்ச்சி தீர்ந்து அனைத்தும் ஒரு பரமாத்மாவின் உடல் என்பதை உணர்தல் மோக்ஷம். இதனால் சில வேதாந்திகள் அறிவே மோக்ஷம் என்பார்கள். 'மோக்ஷம்' என்றால் வடமொழியில் 'விடுதலை' என்றே பொருள். 'விடு' என்ற தமிழ் மொழியினின்று 'விடுதலை' அல்லது 'வீடு' என்ற மொழி உண்டாவது போலவே

---

முற்பக்கத்தொடர்ச்சி:-

**பகவத் கீதையில்:—**

*"வெவ்வேறு விருப்பங்களாற் கவரப்பட்ட அறிவினை யுடையோர் தத்தம் இயற்கையாற் கட்டுண்டு வெவ்வேறு நியமங்களில் நிற்பாராய் அன்னிய தேவதைகளை வழிபடுகின்றனர்"*

*"அதினின்றும் தாம் விரும்பிய வற்றை எய்துகின்றார்"*

*"எனினும் அற்பமதியுடைய அன்னோர் எய்தும் பயன் இறுதியுடைத்தாம்"* எனப் பார்த்த சாரதி கூறுவதும் நோக்கற்பாற்று.

**சிவஞான சித்தியாரில்:-**

*"யாதொரு தெய்வங்கொண்டீ ரத்தெய்வமாகி யாங்கே*
*மாதொரு பாகனார்தாம் வருவர் மற்றத் தெய்வங்கள்*
*வேதனைப் படும் இறக்கும் பிறக்கும் மேல் வினையுஞ் செய்யும்*
*ஆதலால் இவையிலாதான் அறிந்தருள் செய்வனன்றே."*

எனவும், சமய உண்மை கண்ட பெரியார் கூறும் வாய்மையாற் பதி நிச்சய முணர்ந்து தாம் வழிபடுவதோடமையாது, தம்மினுங் குறைந்த அறிவுடைய மக்கள் தம்மறிவுக்குத் தகச் செய்யும் வழிபாடுகளை இகழாது, பரிகசியாது, "தெய்வமிகழேல்" என்ற ஔவைமொழியைச்சிந்தித்து தம்நிலை தங்கொள்கையிற் பிறழாது "சைவமாஞ் சமயஞ்"சார்ந்த புண்ணியப்பேற்றை நினைந்து அம்மையப்பர் திருவருள் வழி நின்றொழுகுவதே மேனிலையடையும் வழியாம்.

'மோக்ஷம்' என்கிற சமஸ்கிருத பதத்தின் தாது 'வீடு' என்ற பொருள் கொண்ட ஒரு வடமொழி வினைச்சொல். மோக்ஷம் அல்லது விடுதலை என்பது ஒரு நிலை. ஓர் ஊரோ, உலகமோ, மாளிகையோ, தோட்டமோ அல்ல.

ஆகையால் நம்மாழ்வார்,

*"நன்றாய் ஞானம் கடந்து போய்*
*நல்லிந்திரியம் எல்லாம் ஈர்ந்து*
*ஒன்றாய்க் கிடந்த அரும் பெரும்பாழ்,*
*உலப்பிலதனை உணர்ந்து ணர்ந்து*
*சென்று, ஆங்கு இன்ப துன்பங்கள்*
*செற்றுக் களைந்து பசை அற்றால்,*
*அன்றே அப்போதே வீடு,*
*அதுவே வீடு, வீடாமே!*

❀ ❀ ❀

*"அதுவே வீடு, வீடு பேற்று*
*இன்பந்தானும் அது; தேறி*
*எதுவே தானும் பற்றின்றி*
*யாதுமிலிக ளாகிற்கில்*
*அதுவே வீடு, வீடு பேற்று*
*இன்பந்தானும் அது; தேறாது,*
*எதுவே வீடு? ஏது இன்பம்? என்று*
*எய்த்தார் எய்த்தார் எய்த்தாரே!"*

என்கிற பாசுரங்கள் பாடினார்.

பரம் பொருளுக்கும் நமக்கும் உள்ள உண்மைச் சம்பந்தத்தை உணர்ந்தோமானால், இவ்வுலகத்தில் ஜீவனுக்கும் சிவனுக்கும் உள்ள வேற்றுமையுணர்ச்சி அற்றுப்போகும். வேற்றுமையுணர்ச்சி நீங்குவது தூக்கத்தினின்று விழிப்பது போல். இரவில் ஒருவன் கனவு காண்கிறான். அதில்தோன்றும் சம்பவங்களினால் கஷ்டப்படுகிறான். அவனுக்கு எவ்வாறு கஷ்டநிவாரணம் உண்டாகும்? தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து கனவைக்கனவென்றுகாண்பதே நிவாரணம். அதுபோல் ஆத்மாவைப் பிடித்து நிற்கும் வேற்றுமையுணர்ச்சியினின்று விழித்தெழுந்து பொறாமை கோபம் முதலிய கஷ்டங்களின்று விடுவித்துக் கொள்ள வேண்டும். ஆகையால் "எழு! எழு! விழித்தெழு!" என்று உபநிஷத்துக்கள் முழங்கு கின்றன. தன் ஆத்மாவின் உயிராய் நிற்பது பரம் பொருள் என்கிற ஞானம் பெறுவது

நல்ல தூக்கத்தினின்று விழிப்பது போன்ற ஒருவித மாறுபாடு. அடுத்த அறையில் சுப்பன் இருக்கிருன் என்று சொல்லக்கேட்டு விஷயத்தைச் சும்மா தெரிந்து கொள்வதுபோல் அல்ல. மனோபாவமே முற்றும் மாறவேண்டும்.

தூக்கத்தினின்று விழிப்பது சுலபம். ஆனால் சம்சாரமாயை என்கிற பெருந்தூக்கத்தினின்று விழிப்பது எளிதன்று. விழிக்கவேண்டும் என்கிற விருப்பம் உள்ளத்தில் முதலில் பொங்கவேண்டும். மறுபடி வேற்றுமையுணர்ச்சியில் வீழாமல் காத்துக் கொண்டே இருக்க வேண்டும்.

அறியாமையால் தூண்டப்பட்டு அநித்தியசுகங்களை அடைய விரும்புகிறோம். அதற்காகப் பலகாரியங்கள் செய்கிறோம் விரும்பியசுகங்களை அடையாததனால், அல்லது அடைந்து விட்டுப் பிறகு இழந்ததனால், கோபம், துவேஷம், துக்கம் இவைகளை உண்டாக்கிக்கொள்கிறோம். இதனால் முன்னைவிட அறியாமை அதிகரிக்கிறது. 'தான்' என்கிற அகங்காரமும் 'தனது' 'தனக்கு' என்ற பொருட்பற்றும் ஆசையும் முன்னைவிட அதிகமாகின்றன. இவ்வாறு உண்மையினின்று வர வர வெகுதூரம் விலகிப் போய்விடுகிறோம். அப்படிப் போகாமல், உண்மையை அணுகுவதே விடுதலைக் குவழி. இதற்கு அடக்கமும் சீலமும் அவசியம். உள்ளத்திலும் நம்மைச் சுற்றிலும் இருப்பது பரம் பொருள் என்றறிந்து அந்தப்பரம் பொருளைச் சிரத்தையுடன் தியானித்தல் அவசியம்.

*காக்கை குருவி எங்கள் ஜாதி-நீள்*
*கடலும் மலையும் எங்கள் கூட்டம்*
*நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை,*
*நோக்க நோக்கக் களியாட்டம்!*

என்று பாரதியார் ஆடிப்பாடியது இதைத்தான்.

சமூகச் சேவைக்கு முக்கியமான தடை சுயநலம். இந்தத்தடையான ஞானத்தால் ஒழியும். பூரணமான ஞானம் அடையாமல்போனலும்முயற்சியைவிடலாகாது அரைகுறையாகஅடைந்தஞானமும் ஓரளவு நன்மை தரும். முயற்சியினலேயே மாசுகள் கொஞ்சம்நீங்கப்பெற்று நற்குணங்களை அடைவோம். வாழ்க்கையில் நாம்செய்யப்பார்க்கும் பல பாபச்செயல்களினின்றும் தப்புவோம். வெற்றியடையாவிட்டாலும் முயற்சியே நம்மை மேல் நிலைக்கு உயர்த்தும்.

# ஐந்து திருடர்.

*[கி. வா. ஜகன்னாதன்.]*

அழகான வீட்டை ஒரு செல்வர் ஏழை ஒருவனுக்கு அளித்தார். காற்றும் மழையும் கலந்து அடித்தால் கலங்காமல் வாழ்வதற்கென்று அந்த வீட்டை ஏழைக்குக் கொடுத்தார் செல்வர். ஏழை அதிலே வாழ ஆரம்பித்தான். ஒரே இருட்டாக இருந்தது. வாசலில் இருட்டு; வீட்டுக்குள்ளோ சொல்லவே வேண்டாம்.

ஒரு விளக்கை ஏற்றிப்பார்த்தால் உள்ளே உள்ள பொருளும் வெளியிலே உள்ள பொருளும் தெரியும்என்று எண்ணினன் ஏழை விளக்குச்சிறியதாக ஏற்றினன். நன்றாகத் தெரியவில்லை. கொஞ்சம் தூண்டினன் சிறிதளவேதெரிந்தது. மறுபடியும் தூண்டினன். எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு உயரமாகத் தூண்டினன். விளக்குப்பளிச்சென்று தெரிந்தது. "இனிமேல் இந்த வீட்டிலே குடியிருக்கலாம். வேண்டிய பண்டங்களைத்தொகுத்துக்கொண்டு வந்துவைத்து உண்டு வாழலாம்." என்று அந்த ஏழை எண்ணினன்.

'இந்த விளக்கின் உதவியினலும் வீட்டின் உதவியாலும் வாழலாம். மேலும் மேலும் சிறப்பு அடையலாம்' என்ற ஊக்கம் உண்டாயிற்று.

ஆனல் விளக்கு நன்றாக ஒளிவிடும் போதுவீட்டைச் சுற்றிப் பார்த்தான் ஏழை அந்த வீட்டில் அவன் தனியாக வாழலாம் என்று நினைத்து மகிழ்ந்திருந்த அவனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. அந்த வீட்டில் வேறு மனிதர்களும் இருந்தார்கள் ஒருவர் இருவர் அல்ல; ஐந்து திருடர்கள். "அடடா! திருடர்கள் வாழும் இந்த இடத்துக்கா நாம் வந்து சேர்ந்தோம்!" என்ற சிந்தனை ஏழைக்கு உண்டாயிற்று. 'நான் ஒருவன்; இவர்கள் ஐந்து பேர் அவர்களுக்கு நடுவிலே நாம் எப்படிச் சுதந்தரமாக வாழமுடியும்?' என்ற கவலை வேறு தோன்றியது. ஆனலும் தன்னுடைய பலத்தினலே அந்த ஐந்து பேரையும் அடக்கலாம் என்று பார்த்தான், முடியவில்லை.

இறைவனுக்கு நல்ல மலர்களைப் பறித்துக்கொண்டு வந்து பூஜை செய்யலாம் என்று எண்ணியிருப்பான் ஏழை அந்த ஐவரி

ல் ஒருவன் அத்தனை பூவையும் யாரோ ஒரு பெண்ணின் கொண்டையிலே செருகி விட்டு வருவான். இறைவனுடைய விக்கிரகங்களை வைத்துஅலங்கரித்துப்பார்க்கவேண்டு மென்று இடம்பண்ணுவான். அந்த இடத்திலே மண்ணையும் பொன்னையும் பெண்ணையும் கொண்டுவந்து நிறுத்துவான் ஒரு திருடன். இப்படியே நல்ல காரியங்கள் எது செய்ய முயன்றாலும் அந்த ஐந்து பேர்களும் ஏதாவது தடை செய்தார்கள். அவர்களை அடக்கலாம் என்றுபார்த்தான், முடியவில்லை. அவர்கள் மிகவும் பலமுடையவர்களாக இருந்தார்கள்.

"சரி, சரி இது நம்மால் முடியாத காரியம். வீட்டை நமக்குக் கொடுத்த செல்வரிடமே சொல்லி இந்த ஐந்து பேருடைய கொட்டத்தையும் அடக்க வேண்டும்" என்று எண்ணினான் ஏழை.

"ஸ்வாமி, எனக்கு நீங்கள் அளித்த வீட்டிலே விளக்கை ஏற்றி வேண்டுமட்டும் உயரத்தூண்டி, வாழும் உபாயம் என்ன வென்று அறிந்து, மேலும் மேலும் உயர்வாக வாழலாம் என்று எண்ணினேன். அப்படி நான் எழாதபடி அந்தவீட்டுக்குள், என் முயற்சிகளுக்கெல்லாம் தடையாக ஐந்து பேரை வைத்திருக்கிறீரே! அவர்களை என்னால் அடக்க முடியவில்லை. அவர்கள் சாலவும் வலியவர்களாகியிருக்கிறார்கள். நான் இனியென்ன செய்யட்டும்? ஒன்றும் தெரியவில்லையே!" என்று முறையிட்டுக் கொண்டான்.

செல்வர் திருப்புகலூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான். ஏழை திருநாவுக்கரசு நாயனார் அவர் பெற்ற வீடு உடம்பு. அதில் ஏற்றின விளக்கு அறிவு. அதனுள் சாலவலியராக இருக்கும் ஐவர் ஐம்பொறிகள்.

*மெய்யுளே விளக்கை ஏற்றி*
*வேண்டளவு உயரத் தூண்டி*
*உய்வதோர் உபாயம் பற்றி*
*உகக்கின்றேன்; உகவாவண்ணம்*
*ஐவரை அகத்தே வைத்தீர்;*
*அவர்களே வலியர் சாலச்*
*செய்வதொன்று அறிய மாட்டேன்*
*திருப்புகலூரனீரே.*

முற்தொடர்ச்சி:-

# கௌரி அம்மையார்.

மிருடானியின் உள்ளத்தே தெய்வ பக்தியை ஊட்டுவதற்குக் காரணமாயிருந்தவர் அவரது அன்னையாரும் பாட்டியாரும், அவ்விருவருடைய ஞானசம்பாஷணையில் இச்சிறுமி பெரிதும் ஈடுபடுவாள். அவர்கள் செய்யும் வழிபாட்டுக்கு இவள் மனமகிழ்ந்து உதவி புரிவாள். இருவரும் தமது குலமுறைக் கேற்பச் சக்தி தேவியினிடம் போற்று பூண்டவர்களாயிருப்பினும், ஏதோ தெய்வவசத்தால் மிருடானி கண்ணனிடம் பக்திவாய்க்கப் பெற்றாள். அவள் பத்தாவது வயதில் ஒருநாள் தன்னோடும் தோழமை கொண்ட சிறுவர் சிறுமியரோடு களித்து விளையாடாது ஒருபக்கமாக ஒதுங்கியிருந்தபோது, கம்பீரமாக வீதி வழியே நடந்து வந்த ஓர் அந்தணரைக் காணலும், உள்ளுணர்ச்சி தூண்ட அவரை வீழ்ந்து வணங்கினளென்றும், அப்பெரியார் உனக்குக் கிருஷ்ண பகவானிடம் பக்தி உண்டாவதாக! என்று வாழ்த்தினரென்றும் கூறுவார். சிறிதுகாலஞ் சென்றபின், ஒருசமயம் அதே அந்தணரை ராஸபௌர்ணமி (கண்ணபிரான்

---

முற்பக்கத்தொடர்ச்சி:-

(மெய்-உடம்பு. விளக்கு என்றது அறிவை. உகக்கின்றேன்-உயர்கின்றேன்; உகப்பு-உயர்வு. ஐவர்-ஐம்பொறிகள். சால-மிகவும் திருப்புகலூரனர் என்பதன் விளி திருப்புகலூரனீரே என்பது).

இந்த ஐந்து பேரும் பண்ணுகிற அமர்க்களத்தை அருணகிரிநாதரும் சொல்கிறார்.

*"ஓரஒட்டார், ஒன்றை உன்னஒட்டார், மலர் இட்டுனதாள்*
*சேரஒட்டார் ஐவர்; செய்வதென் யான்? சென்று தேவர் உய்யச்*
*சோரநிட் டூரனைச் சூரனைக் காருடற் சோரிகக்கக்*
*கூரகட்டாரி இட்டோர் இமைப்போதினிற் கொன்றவனே."*

என்பது கந்தர் அலங்காரம்.

'சோரனும்கொடுமை புரிபவனுமாகிய சூரனைச் சங்காரம்செய்த பெருமான் நீ அல்லவா? நீ இந்தச் சோரர்கள் ஐவரையும் அடக்கக்கூடாதா?' என்று அவர் விண்ணப்பித்துக் கொள்கிறார். (குமர குருபரன்)

கோபியரோடு ராஸக்கிரீடை செய்ததினம்). அன்று மிருடானி சந்தித்து, அவரிடமிருந்து தீக்ஷை பெற்றதாகவும் சொல்வர். எதிர்பாராத ஒரு வழியில் அவள் கிருஷ்ண பகவானது சிலையைப்பெறலானாள். பிருந்தா வனத்திலிருந்து வந்த ஒரு நங்கையர் இவ்வமையம் பவானிபூரிலே அவளது இல்லத்திலே வாழ்ந்து வந்தனள். ஆயுள் முழுதும் பிரம்ம சாரிணியாக இருந்து வந்த அந்த அம்மையார் கண்ணனுக் கென்றே தமது வாழ்வை ஒப்படைத்த பேரன்பானார்; அவர் வழிபாட்டிலும் தியானத்திலும் நேரத்திற்பெரும் பகுதியைச் செலவு செய்வார்; எஞ்சிய பொழுதைக் குடும்பத்திலிருந்தமாதரோடு ஞான சம்பாஷணையிற்கழிப்பார். ஒருநாள் மிருடானி சாளிக்கிராமம் ஒன்று தன்னறையில் தரைமீது கிடப்பதைக்கண்டு, அதைக் கையில் எடுத்து அதன் அழகை வியந்து கொண்டிருந்தார். அத்தருணம் அதைக்கண்ட அந்த அம்மையார் சரேலென வந்து, மிருடானியிடமிருந்து அதை வாங்கிக் கொண்டு தன்னறைக்கு மீண்டாள். இதிலிருந்து இருவருக்கும் பழக்கமேற்படலும், ஒருநாள் அவ்வம்மையார் மிருடானியைத் தமது அறைக்கு அழைத்து, தமது வழிபடு கடவுளாகிய கண்ணபிரான் எனும்அச்சிலை தமக்கு உயிர்க்குயிராய் இருப்பதைக் கூறி, மிருடானியின் தெய்வ பக்தியினை மெச்சி, கண்ணபிரானது பிரியப்படியே அவரது வடிவத்தை அவளிடம் ஒப்புவிப்பதாகவும் சொல்லி, அவளுக்கே மகிழ்ந்து அதனைக்கொடுத்துவிட்டு அகன்றாள். அவ்வடிவினை உயிரோடு எழுந்தருளிய கண்ணபிரானாகவே கருதித் தினமும் மிருடானி முறையாகப் பூசித்து வந்தாள். கௌரியம்மையார் அதன்பின்வாழ்வு முழுவதும் பேரன்போடு அவரைத் தமது இறுதி நாள்வரை விடாது வழிபட்டு வரலானாள்.

மிருடானியின் இளமை நலனோடுபக்தி நலனும் அரும்பி வரும் இந்நாளில், அவளது உற்றார் உறவினரது நெஞ்சைத் துணுக்குறச் செய்த ஒரு செயல்நிகழலாயிற்று. சிறுமியின் பேதைப்பருவம் நீங்கி இளமங்கைப் பருவம் எழில்கிளர நண்ணலும், அக்காலத்திய வழக்கத்திற்கேற்ப உற்றார் பலரும் அவளை வதுவை வலையிற் (கலியாணமெனும் வலையிற்) சிக்க வைக்க எண்ணலானார். ஆனால் அடியார்க்கெளியனாய தாமோதரனையே இன்னுயிர்க்காதலனாக வரித்திருந்த அந்நங்கையோ தனது உடல் பொருளாவியனைத்தையும் மாமணி வண்ணன் கண்ணன் பாலே ஒப்புவித்திருந்தாள். வானிடைவாழும் தேவர்க்குரிய அவியினைக் கானிடைத் திரிவதோர் நரிக்குதவ நயவா

தார் போல, தன்னை மானிடவர்க்கு மணம் பேசும் மாதர் முன்பு அவள் 'இறவாத கணவர்க்கே மணமாலை சூட்டுவேன் யான்' என்பாள். இதைக்கேட்டு நெஞ்சுகலங்கிய உறவினர் அவளது ஞான நோயைத் தீர்த்தற்கு ஈன மணம் புரிவித்தலையே மருந்தாக நாடினர்.

பதின் மூன்று வயதடைந்த அப்பெண்ணிற்கு மணமகனையும் மணநாளையும் குறித்து நன்னாளன்று வேண்டுவார் அனைவரையும் விருந்தழைத்து விவாகச்சடங்கினைத் தொடங்கலானர். அதனைக் கண்டு சீறிய சிறுமி, தாமோதரச்சிலையையும், கௌராங்கரின் உருவப்படத்தையும் படைக்கலமாகக் கையிலேந்தி ஓரறைக்குட் புகுந்து தாழிட்டு, தன்னை அணுக வருவாரைச் சொல்லம்புகளால் துரத்தி வந்தாள். பெற்ற தாயார் கதவண்டை சென்று பிரிய மொழிகளால் கதவைத் திறக்க வேண்டலும், அதற்கு இணங்கி அன்னையை உள் வர விட்டனள். மிருடானிகண்ணீர்சொரிந்து, கண்ணனெனும்தெய்வக்காட்சிப் பழகிக் கிடப்பேனை மண்ணிலொருவர்க்கு வாழ்க்கைப் படச்செய்யாதருள்க! என்று தன் அன்னையாரை வேண்டினள். சேயின் உள்ள நிலையைத் தெளிய உணர்ந்த கிரிபால தேவியார், ஊன வாழ்வினில் அவளை வலிந்து புகுத்தும் எண்ணத்தைத் தவிர்த்து, குறித்த மங்கல வேளை குறுகலும், உயர்வற உயர் நலமுடைய அயர்வறும் அமரர்கள் அதிபதிக்கே அவளை மனமுவந்து நாயகியாக நல்கி, இறைவனை ஏற்றருளுமாறுவேண்டினள்; பின்னர் உற்றாரது அலட்டுதலுக்கு ஆளாகாதவாறு, அவளை அறையினின்றும் வெளியேற்றி, அடுத்துள்ளஓர் உறவினளான நங்கையின்இல்லஞ்சென்று தங்கி இருக்குமாறு பணித்தாள்.

அங்ஙனமே செய்த மிருடானி மறுநாட் காலை 'நாணியினி ஓர் கருமமில்லை, தனிவழியே போயினள் என்னும் பழியும் பெரிதன்று.' என்றுதுணிந்து, ஒருவரும்அறியாதவாறுஓட முயன்றனள்: ஆனல் பிறர் கண்ணிற்கு இலக்காகி வற்புறுத்தப்பட்டு மீண்டும் இல்லத்திற்கே வரவேண்டியவளானள். இரண்டாம் முறையும் சின்னட் சென்றபின் காவல் கடந்தோட முயன்றாள்; உடனே அவளைப்பற்றியிழுத்து வந்துஇல்லத்தே புகுத்தினர். கான்படு கண்ணியில் மான்படுமாறு கவலையிலுழன்ற நங்கை அச்சிறை வாழ்வினின்றும் விடுபடத் துடிக்கலானள்; கடவுளை நாடும் வாழ்க்கையில் உள்ளகவர்ச்சி நாளும் ஓங்கவே, என்றைக்கும் பற்றாய இறைவனையே சரண

# அனைத்துயிர்க்கும் அருள் தாங்கிய திலகவதியார்.

[வித்துவான் ஆ. சிவலிங்கனார்]

நடு நாட்டுத் திருவாமூரில் தோன்றியவர் நம் திலகவதியார். தந்தையார் புகழனார். தாயார் மாதினியார். தம்பி மருள்நீக்கியார். தாய் தந்தையரால் உறுதி படுத்தப்பட்ட கலிப்பகையார் என்பவரைக் கணவராக மனதில் பதித்துக் கொண்டார் அவர். கலிப்பகையார் தம் திருமணத்திற்கு முன் தம் அரசன் ஏவலை மேற் கொண்டு வடநாடு சென்று போர் புரிகையில் அம்மையாரின் தாய் தந்தைய

---

முற்பக்கத்தொடர்ச்சி:-

கப்பற்றி உலக வாழ்க்கையைத் துறப்பதிலே உறுதி பூண்டிருந்தாள். அவட்கு மனத்தளை பூட்டும் கருத்தை அனைவரும் அறவே மறந்தனர்; மகளிற்குரிய நல் இயல்புகளை இழந்து, மனையகந்துறந்து ஊரூராகத்திரிந்து, உடலிற்கும் ஒழுக்கத்திற்கும் ஊறு விளைவித்துக் கொள்ளுவளோ என்றஞ்சினர் இல்லத்திலிருந்து சாதனம் பழகியும் இடையிடையே புண்ணிய தலங்கட்குச் சென்று மெய்யன்பரையும் முனிவரையும்வணங்கியும் ஆசி பெற்றும், இறைவனை நாடும்வாழ்க்கையை அவள் கைக்கொள்வதற்கேற்ற வசதியை அளிக்கமுயன்று வந்தனர். 1876-ம் ஆண்டின் தொடக்கத்தில் ஆணும் பெண்ணுமாக முப்பது யாத்திரீகர் கங்கா சாகரத்திற்குப் புறப்படலும் மிருடானியையும் உடன் அழைத்துச்சென்றனர்; இதனால் அவளது மனம் சாந்தமுறும் என நம்பினர். ஞானத்தீ கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த அவரது உள்ளமோ, அனைத்தையும் துறந்தாலன்றி இறைவன் தன்னைக் காட்டிக்கொடானென்பதை உணர்ந்திருத்தலின், பிறரறியாது கூட்டத்தினின்றும் பிரிந்தோடுதற்குத் தக்கதோர் சமயத்தையே எதிர்நோக்கியிருந்தது. அவ்வமயம் எட்டியதும் மிருடானி பிறர்காணாது வெளிக்கிளம்பித் தன்னந்தனியளாய் ஓடி எங்கோ மறைந்தனள். கூட்டத்தார் தேடியும், கிரிபாலாதேவியார் பல தூதரை ஏவிஅவளது இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க ஏற்பாடுசெய்தும் அம்முயற்சிகள் வறிதாயின, மனவலையினின்றும் உயர்ந்தாள் மிருடானி. விண்ணகத்து உலவப்பிறந்த பறவையை மண்ணகத்தே கூட்டில் அடைத்து வைத்தல் எவ்வாறு இயலும்? (தொடரும்)

ரான மாதினியாரும் புகழனாரும் உயிர் நீத்தனர். திலகவதியார் தம்பியாரான மருள் நீக்கியாருடன் சுற்றத்தின ரிடையிலிருந்து வந்த காலத்தில் வடக்கே சென்ற கலிப்பகையார் போரில் உயிர் நீக்கிய செய்தி எட்டியது. உடனே திலகவதியார் தாமும் உயிர்நீக்க எண்ணியபோது, தம்பியார் தம்மைவிட்டுப் பிரியின் தாம் முன்னதாகவே இறப்பதாகக் கூறினர். தம்பியார் வாழவேண்டும் என்ற எண்ணத்தால் அம்மையார் தாம் இறவாது கைம்மை நோன்பை மேற்கொண்டனர். இவ்வரலாற்றைச் சேக்கிழார்,

> *"தம்பியார் உளராக வேண்டுமென வைத்ததயா*
> *உம்பருலகணையவுறு நிலைவிலக்க உயிர்தாங்கி*
> *அம்பொன்மணி நூல்தாங்கா தனைத்துயிர்க்கும் அருள்தாங்கி*
> *இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதியாரிருந்தார்"*

என அழகாகக் கூறுகிறார். தம்பியார் உலகில் உயிர்வாழ வேண்டும் என வைத்த தயை அவரது இறப்பினை-உயிர்விடுவதை விலக்கியதாம்.

உலகில் உடன்பிறந்தார்களிடம் அன்பு கொள்ளல் இயல்பு. அம்மையார் தம் உடன்பிறந்தாரான மருள்நீக்கியாரிடம் அன்பு கொண்டதாகக் கூறாமல் அருள் கொண்டதாகக் கூறுகிறார் சேக்கிழார். தயா என்ற வடசொற்கு அருள் என்பது பொருள். அருளாவது தொதுமலரிடத்துத் தோன்றும் உள்ள நெகிழ்ச்சி. அம்மையாருக்கு நேர் தம்பியார் மருள்நீக்கியார். அவ்வாறிருக்க அவரிடம் அம்மையார் வைத்தது தயை என்கின்றார். அதனால் நாம் அறிய வேண்டுவதுண்டு. அம்மையாரது அருள் நோக்கம் மருள்நீக்கியாரை மட்டும் குறித்ததன்று. உலகமக்களையும் குறித்ததாகும் என்னலாம். உலகில் தம்பியார் இருந்து நன்னெறி சென்று மக்களுக்கும் நல்லன புரியவேண்டும் என்ற எண்ணம் இருந்தமையால் அவர் அருள் தம்பியார்க்கேயன்றி மக்களுக்கும் உரியதாகும் என்னலாம். தம்பியாரிடம் மட்டும் சென்றதாயின், அது அருள் எனப்படாது. அன்பு எனப்பட்டுப் பொதுவில் பெண்களின் உடன் பிறப்புப் பற்றுப் போன்றதாகிவிடும். அம்மையார் கைம்மை நோன்பு கொண்டவர். உலகப் பற்றினை விட்ட நிலையினர். அதனால் அனைத்துயிர்க்கும் அருள் தாங்கினர்; தவம் தாங்கினர்; தவத்திற்கு இன்றியமையாத அருள் உணர்வு தம்பியார் மாட்டும் எழுவதாயிற்று.

"உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்கவேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி-உடன்பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு"

இப்பாடல் ஈண்டு நினைவுக்கு வருகின்றது. உடன் பிறந்தவர்கள் சொத்து காரணமாகத் தம்முள் பகைத்து ஒருவரை ஒருவர் வீழ்த்தப் பார்ப்பதைக் காண்கின்றோம். அண்ணன் ஆண்ட நாட்டைக் கைப்பற்றிக் காட்டிற்கு விரட்டிய இளங்குமணன் வரலாற்றினை அறியாதவர் இலர். இவன் போன்றோர் யாவரும் நோயைப் போன்றவரே யாவர். தமக்கு வரஇருந்த பேரரசினையே துறந்து முறைப்படி அண்ணனுக்கே அரசு உரியதாகவேண்டும் என எண்ணி அண்ணனாகிய செங்குட்டுவனுக்கே அரசை விடுத்துத் துறவு பூண்ட இளங்கோவடிகள் போன்றோர் உலகில் மிக அரியராவர். மேற்பாட்டு இளங்கோவைப் போன்றோரை நோக்கியதன்று. இளங்குமணனைப் போன்றோரை நோக்கியதாகும். உடன்பிறப்பாளர் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதவர். "தம்பியுடையான் படைக்கஞ்சான்" என்று வழங்கும் வழக்கினையும் கேட்கலாம். உடன் பிறப்பினர் அனைவரும் ஒற்றுமையுடன் இருத்தல் வேண்டும். தலைவன் கொள்கையை மற்றவர் புறக்கணிக்காது மற்றவரும் தன்னை மதிக்குமாறு அவர்களுடன் கலந்தே தலைவனும் யாவும் நடத்தல் வேண்டும். இவ்வாறு செல்லும் வாழ்நாளில் உடன் பிறப்பினர்கள் உலகினரால் புகழ் பெறுவர்; வேண்டும் பலன் பெறுவர்.

"மாறில் உடன் பிறப்பில்லா உடம்புபாழ்" என்றதையும் கவனித்தல் வேண்டும். உடன் பிறந்தான் மாறுபாடின்றியிருக்கவேண்டும். உடன் பிறப்பு எனப் பொதுப்படையில் இருத்தலால் உடன் பிறப்பு ஆணாகவோ பெண்ணாகவோ இருவருமாகவோ இருக்கலாம். ஆணாகவே இருக்கவேண்டும் என்ற நியதியில்லை. யாவராயினும் மாறுபடாதிருக்கவேண்டும்,

மருள்நீக்கியாருக்கு மாறில் உடன் பிறப்பாக அமைந்தார் திலகவதியார். இவர்கள் சைவ வழியினர். திலகவதியாரின் துணைகொண்டு உலகநிலையாமையை உணர்ந்து துறவு நெறிகொண்டவர் காலமாறுபாட்டால் சைவம் விட்டுச் சமணம் புகுந்தார். பாடலிபுத்திரம் என்னும் நகர் அடைந்து அங்கிருந்த சமணர்களால் சமணராக்கப் பட்டுத் தருமசேனர் என்னும் சிறப்புப்பெயரும் அடைந்து சமண

# அன்பியலே காந்தீயம்

## போலி நாடகம் குண்டினும் கோரம்.

*[குன்றக்குடி அடிகளார்]*

அணுக்குண்டு. ஐட்ரஜன் குண்டு, டொலர் ஆகியவை இல்லா தஇந்தியா இன்று உலக அரங்கிற்பெரிதும் மதிக்கப்படுகிறது. இந்தியப் பெண்மணி ஐக்கிய நாடுகள் சபைக்குத் தலைமை தாங்குகிறார் என் பெருமைஉள்ளது. காரணம்யாது? காந்தீயம்தான். உலகஅரங்

---

முற்பக்கத்தொடர்ச்சி:-

ரால் போற்றப்பட்டார். திலகவதியாருக்குத் தம்பியாரின் மதமாறுதல் கவலைக்கிடமாகியது. தம்பியாரை வெறுக்கவில்லை. தாம் உயிருடன் இருப்பதே தம்பியார்க்காக அன்றோ? அதனால் தம்பியாரிடம் கொண்ட அருளில் சிறிதும் தளரவில்லை. மீண்டும் தம்பியாரைச் சைவராக்க எண்ணினார். திருவாமூர் விட்டுத் திருவதிகை வந்து சேர்ந்தார். அங்கு இறைவனுக்கு வேண்டிய திருப்பணிகள் பலவற்றையும் புரிந்தார். இறைவனிடம் "அடியேன் பின்வந்தவனை ஈண்டு வினைப்பரசமயக் குழி நின்றும் எடுத்தாளவேண்டும்" எனப் பரவினார். அவர் பரவுதலுக்குச் சிவபிரான் அம்மையாரிடம் "உன்னுடைய மனக்கவலைஒழி; அவனைச்சூலைநோய்கொடுத்தாட் கொள்ளுகிறோம் என்றருளினார்." பாடலிபுரத்திருந்த தருமசேனர்க்குச் சூலைநோய் கண்டது. சமணர் போக்கமுடியாது கைவிட்டனர். தருமசேனர் தமக்கையார்க்கு ஆட்போக்கினர். தமக்கையார் அவர் இடம்போக மறுத்தனர். பின்னர் தருமசேனரே தமக்கையாரைப் பணிந்து உய்யும்நெறியருள்க! எனவேண்டினர். அம்மையா.நம் சிவபிரானையே வணங்கும்படி கூறிச் சமயமாற்றம் வேண்டித் திருவாளன் திருநீற்றினை அஞ்செழுத்தும் ஓதிக்கொடுத்தனர். அன்று முதல் மீண்டும் சைவராகித்திகழ்ந்தார். மருள்நீக்கியாரே-தருமசேனரே-நம் திருநாவுக்கரசராவார்.

திலகவதியார் தம்பியார்க்காகவே உயிர் வாழ்ந்ததை உடன்பிறப்புள்ள மகளிர்கள் நன்கு நினைத்துப் பார்க்கவேண்டும். திலகவதியாரைத்தமக்கு ஒருவழிகாட்டியாகக் கொள்வாராக, "பிறமதம் புக்கோர் மீண்டும் தம்மதம்புகவரின் அவரைவெறுத்தொதுக்காது ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்ற சிறந்த கருத்தை சைவ மதத்தலைவர்கட்கு அறிவுறுத்தி அதற்கு வழிகாட்டியவர் திலகவதியார்.

கில் நமக்கு இந்தப் புகழ் இருக்கும் பொழுது உள்நாடு எந்தநிலையிலி ருக்கிறது? ஒரே பூசல். காந்தீயம் நம்வாழ்விற் கலவாததே இதற்குக் காரணம்.

விடுதலை தவறிக்கெட்டு, வறுமை மிஞ்சி நின்றது அண்ணலுக் குழுந்திய பாரதம். இதை மாற்ற அவதரித்தார் காந்திஜீ. இருபதாம் நூற்றுண்டை விஞ்ஞான நூற்றுண்டு என ஒரு அறிஞர் கூறுகி ருர். இதை எந்த இந்தியனும் ஒப்புக்கொள்ளமுடியாது.

**அண்ணல் அவதாரம்.** ஆங்கிலப்பேரரசை ஒழித்துக்கட்ட முயன் ருர்கள் ஹிட்லரும் முசோலினியும்; சூவெஸ்கால்வாய்வரை வெற்றி நடைபோட்டு முன்னேறினர். இறுதியிற் பின்வாங்கி உலகிலிருந்து மறைந்தது அவர்கள் கொள்கை. அந்த யுத்த நூற்றுண்டிலேதான் காந்திஜீ தமது அஹிம்சைக் கொள்கையைப்பரப்பி அநியாயத்தை மண்டியிடச் செய்தார்.

**பொதுச்சொத்து.** காந்தீயம்பொதுச்சொத்து. யாருக்கும் இதுபொ ருந்தும். எங்கு அருள் இருக்கிறதோ அங்கு காந்தீயம் உள்ளது.

காந்தீயத்தை ஐயாயிரம் பத்தாயிரம் என்று எண்ணிக்கையை வைத்துக் கணக்கிடுவதில்லை. சேவையை அடிப்படையாகக்கடைப் பிடிக்காமற் போலி நாடகம் நடத்துவது கோட்சே குண்டைவிடக் கொடுமையானது.

காந்தீயம் என்றுல்அரசியல் இல்லை.அன்பியல், அருளியல், சமுதாயஇயல் என்ற அடிப்படையிலுள்ள காந்தீயத்திற் பதினுறு பங்கில் ஒரு பங்கு தான் அரசியல், இதை மறந்து நாம் காந்தீயத்தை முழுவதும் அரசியலாக்கி விட்டோம். அதன் பலன் தான் இன்றுள் ள உள்நாட்டு நிலை.

**வழிகாட்டி.** உலகிற் பலஅறிஞர்கள் அவ்வப்போது தோன்றினுர் கள். 'செய் அல்லது செத்துமடி, என்ருர் ஒருவர். அவரது கொள் கைஅது. காந்திஜீ உபதேசம் மட்டும் செய்யவில்லை; வழி காட்டித் தானே அதன்படி நடந்தும் காட்டினுர். சாதிக்கொடுமை மறைய வேண்டுமென வற்புறுத்தினுர் காந்திஜீ. மறைந்து விட்டதா அக் கொடுமை? சட்டமியற்றிப் பொலிசைச் சுட்டிக்காட்டிக் காட்டிக் காந்தீயத்தை நிலைநாட்ட முடியாது. விேேபாபாஜீயைக் கொடுமை ப்படுத்தும் அளவிற்கு இன்னும் நாட்டில் மக்கள் இருக்கிருர்கள் என்பதை நினைத்துப்பாருங்கள்,

சமத்துவமில்லாத நாளிற் கிராமம் கிராமமாகத், தெருத்தெரு வாக, வீடுவீடாகச்சென்று காந்தீயத்தைப் பரப்பிச் சமத்துவ உணர் ச்சி உண்டாக்கப்பாடுபடுங்கள். உழைப்பின் பலனை உணரச்செய் யுங்கள். காந்தீயம் வாழ்க !

# புத்தாண்டுச் செய்தி

ஜய வருஷம் "ஜய ஜய போற்றி" என்று சொல்லிக் கொண்டே வருகின்றது. விஜயவருஷம் "ஆழ்கதியதெல்லாம்" என்று சொல்லிக்கொண்டே போய்விட்டது. அரன் நாமம் சூழ்ந்துவிட்டால் மக்கள் பசியும் பிணியுமின்றி வசியும் வளனும் பெற்று வாழ்வார்கள் என்பதற்கு யாதோர் சந்தேகமுமில்லை.

கழிந்ததற் கிரங்காமல் ஜய வருஷத்தை புதுமலர்ச்சியுடன் வரவேற்போம். வாழ்வில் வெற்றிகாட்டி அமைதியும் ஆனந்தமும் பெற இறைவனை வாழ்த்துவோம்.

"இறைவனே, எமது நாட்டில் வளம் பொழிக; வறுமை யொழிக; கல்வி ஒளி பரவுக; மடமை நீங்குக; கைத்தொழில் வளர்க; சோம்பல் ஒழிக; நீர் நில வளங்கள் பெருகுக; ஏழைகளின் பட்டினி தீர்க; கட்டுகள் ஒழிக; விடுதலை விளங்குக; மனமாசுகள் ஒழிக; ஆன்மஞானம் பொலிக; அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளும் எமது வாழ்வில் இணைந்து பொலிக!" என்று புதுவருடத்தன்று ஒவ்வொருவீட்டிலும் கடவுள் வணக்கம் நடத்தி மகிழ்க!

*ஆத்மஜோதி நேயர்களுக்கு எமது புத்தாண்டு வாழ்த்துக்களை அன்புடன் வழங்குகின்றோம்- பெற்று நலம்பெறுக!*

வாழ்க புத்தாண்டு வளர்க நம்செந் தமிழ்
வாழ்க இறைநாமம் வளர்க வழிபாடு
வாழ்க ஆத்மா வளர்க ஜோதி
வாழ்க வையகம் வாழ்க வாழ்கவே!


"சரவணா" அச்சகம்.
55, அம்புகாம ரோட், : : : நாவலப்பிட்டி.
வாடிக்கையாளருக்கும் ஆதரவாளர்களுக்கும்
எங்கள் புத்தாண்டு வாழ்த்து உரித்தாகுக.

Regd. at the G. P. O. as a News Paper H. G. 59-300

## திரு. வி. க. நிதி

| | | |
|---|---|---|
| | முன்கணக்கின்படி | 202—00 |
| ஏ. தம்பு புங்குடுதீவு | | 5—00 |
| | ஆகமொத்தம் | 207—00 |

## சந்தா நேயர்களுக்கு

நேயர்கள் கடிதம் எழுதும்போதும் சந்தா அனுப்பும்போதும் விலாசமாற்றம் செய்யும்போதும் தங்கள் தங்கள் சந்தா இலக்கங்களைக் குறிப்பிட வேண்டுகிறோம். ஆத்மஜோதி அனுப்பும்போது உங்கள் சந்தா இலக்கமும் விலாசத்தின் முன்னால் குறிப்பிடப்படுகிறது. அதனைக் குறித்து வைத்துக்கொள்ளவும்.

## திருமந்திர விளக்கம்

தமிழ்ப் பேரறிஞரும் வசவப்பெரியாருமாகிய காலஞ்சென்ற திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி யோகி ஸ்ரீ. சுத்தானந்த பாரதியார் அவர்கள் பத்தாவது சைவத் திருமுறையாகப் போற்றப்படும் திருமந்திரமென்னும் அறிவுக் கடலுள் ஆழ்ந்து பல ஒப்பற்ற முத்துக்களைத் தெரிந்தெடுத்து, அவற்றிற்கு தமது சாந்த அனுபவத்தின் துணைகொண்டு விரிவுரைதந்தனர். அந்திருமந்திரக் கட்டுரைகள் நூல் வடிவுபெற்று விக்கிரம ஆண்டு ஆவணி மாசத்தில் முதலாவது பதிப்பாக வெளிவந்தன, முதற்பதிப்புப் பிரதிகள் மூன்று மாசத்துள் விற்பனையாகிவிடவே தமிழ் நாட்டில் பலர் நூல் கிடைக்காமையினல் வருந்தினர், இரண்டாம் பதிப்பை சுத்தானந்தப் பதிப்பகத்தார் நல்லமுறையில் பதிப்பித்து அன்பர்களின் குறையை நிவிர்த்தி செய்துள்ளார்கள்.

**விலை ரூபா இரண்டரை** தபாற்செலவு தனி

வியாபாரிகளுக்கு தகுந்த கழிவு உண்டு

**வேண்டுவோர்**

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி. (சிலோன்)

என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

சரவண அச்சகம் . நாவலப்பிட்டி.